# ஹஜ்ஜின் சிறப்புகள்

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

## அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு



# ஹஜ்ஜின் சிறப்புகள் 1

## நற்செயல்களில் சிறந்தது

நபி (ﷺ) அவர்களிடம் ‘ (நற்)செயல்களில் சிறந்தது எது? ’ எனக் கேட்கப்பட்டது.

‘ அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நம்புவது ’ என்றார்கள். ‘ அதற்குப் பிறகு எது (சிறந்தது)? ’ எனக் கேட்கப்பட்டபோது, ‘ அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிதல் ’ என்றார்கள்.

‘ அதற்குப் பிறகு எது (சிறந்தது) ’ எனக் கேட்கப்பட்டபோது, ‘ பாவச் செயல் எதுவும் கலவாத (ஒப்புக்கொள்ளப்பட்ட) ஹஜ் ’ என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 1519

# ஹஜ்ஜின் சிறப்புகள் 2

## பெண்களுக்கான சிறந்த அறப்போர் ஹஜ்ஜாகும்

நான் ( நபி (ﷺ) அவர்களிடம்), ‘ அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவதையே (பெண்களாகிய) நாங்கள் சிறந்த செயலாகக் கருதுகிறோம், எனவே, நாங்களும் அறப்போர் புரியலாமா? ’ என்று கேட்டேன்.

அதற்கு நபி (ﷺ) அவர்கள் ‘ (அவ்வாறு) இல்லை. எனினும், (பெண்களுக்குச்) சிறந்த அறப்போர், பாவச் செயல் எதுவும் கலவாத (ஒப்புக்கொள்ளப்பட்ட) ஹஜ்தான் ’ என்றார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள்,புகாரி 1520

# ஹஜ்ஜின் சிறப்புகள் 3-A

## அன்று பிறந்த பாலகனைப் போன்று திரும்புகிறார்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

‘ யார் தீய பேச்சு, பாவச்செயல் ஆகியவற்றில் ஈடுபடாமல் அல்லாஹ்வி(ன் அன்பைப் பெறுவத)ற்காகவே ஹஜ் செய்கிறாரோ அவர், தம்மைத் தம்முடைய தாய் ஈன்ற நாளில் இருந்ததைப் போன்று (பாவமில்லாதவராகத்) திரும்புவார். ’

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 1521

# ஹஜ்ஜின் சிறப்புகள் 3-B

## அன்று பிறந்த பாலகனைப் போன்று திரும்புகிறார்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

‘ யார் தாம்பத்திய உறவு கொள்ளாமலும் எந்தப் பாவமும் செய்யாமலும் யார் இந்த ஆலயத்தை ஹஜ் செய்கிறாரே அவர் அன்று பிறந்த பாலகனைப் போன்று திரும்புகிறார். ’

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 1819

# ஹஜ்ஜின் சிறப்புகள் 4

## சொர்க்கத்தைத் தவிர வேறு கூலி இல்லை

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள்
கூறினார்கள்.
‘ ஓர் உம்ரா செய்வது மறு உம்ராவரை
(ஏற்படும் சிறு) பாவங்களுக்குப்
பரிகாரமாகும். (பாவச் செயல் கலவாத)
ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு,
சொர்க்கத்தைத் தவிர வேறு கூலியில்லை ’

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள்,புகாரி 1773

# ஹஜ்ஜின் சிறப்புகள் 5

## தல்பியா சொன்னவராக எழுப்பப்படுவார்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுடன் ‘அரஃபா’ பெருவெளியில் தங்கியிருந்த ஒருவர், தமது வாகனத்திலிருந்து விழுந்துவிட்டார். அது அவரது கழுத்தை முறித்துவிட்டது

இதைப் பற்றி அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம் சொல்லப்பட்டபோது, ‘அவரைத் தண்ணீராலும் இலந்தை இலையாலும் நீராட்டுங்கள். இரு ஆடைகளில் அவருக்குப் பிரேத ஆடை (கஃபன்) அணிவியுங்கள். அவருக்கு வாசனைத் தூள் போடாதீர்கள். அவரது தலையை மூடாதீர்கள். ஏனெனில், ‘தல்பியா’ சொல்லிக் கொண்டிருப்பவராக மறுமை நாளில் அவரை அல்லாஹ் எழுப்புவான்’ என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள்,முஸ்லிம் 2281

# ஹஜ்ஜின் சிறப்புகள் 6

## அரஃபாவிலுள்ள ஹாஜிகள் குறித்து மலக்குகளிடம் அல்லாஹ் பெருமையுடன் பேசுவான்.

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ், அரஃபா (துல்ஹஜ் 9ஆவது) நாளில் அடியார்களுக்கு நரக விடுதலையளிக்கும் அளவிற்கு வேறெந்த நாளிலும் நரக விடுதலை அளிப்பதில்லை.

அன்றைய தினம் அவன் (அரஃபாவிலுள்ளவர்களை) நெருங்கி, வானவர்களிடம் அவர்களைக் குறித்துப் பெருமை பாராட்டுகிறான். ‘இவர்கள் எதை நாடி (இங்கு குழுமி)யுள்ளார்கள்? ’ என்று (பெருமிதத்தோடு) கேட்கிறான்.

முஸ்லிம் 2623

# ஹஜ்ஜின் சிறப்புகள் 7

## வறுமையையும், பாவங்களையும் நீக்கி விடும்

‘ஹஜ்ஜுக்கும், உம்ராவுக்கும் இடையில் தொடர்ச்சியை ஏற்படுத்தி செய்யுங்கள்.

ஏனெனில் இரும்பின், தங்கத்தின், வெள்ளியின் துருவை உலை நீக்கிவிடுவதைப் போன்று அவை வறுமையையும், பாவங்களையும் நீக்கி விடும் ’ என நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், நஸாஈ 2630